

மதுரவாயல் தொகுதி, வார்டு143, நொளம்பூர், சன்னதி முதல் குறுக்குத் தெருவில் ரூ.31.65 கோடி மதிப்பீட்டிலும் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டி முடிக்கப்பட்ட உயர்மட்ட மேம்பாலத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க வருகை தர உள்ளதால் அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி நிர்வாகிகள் ஆர்.கர்ணல், ம.உதயகுமார், வட்டச் செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.ரூபன், மாமன்ற உறுப்பினர் எம்.இ..ஸ்டாலின், மாவட்ட பிரதிநிதிகள் கே.ராஜ்குமார், பி.சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பயிற்சியின் அடிப்படையில்

# பொறியாளர்கள் திறமையாகப் பணிபுரிய வேண்டும்!

## அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, செப். 26-

சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித்துறை பயிலரங்கில், 16.09.2025 முதல் 25.09.2025 வரை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, பொதுப்பணித்துறையில் பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று (25.09.2025) பயிற்சி வகுப்புகளுக்குச் சென்று பார்வையிட்டு, பயிற்சி பெறும் உதவிப் பொறியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பேசியதாவது:-

பொதுப்பணித்துறை, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் போது, 1858 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 166 ஆண்டுகளாக, பல தலைமைப் பொறியாளர்களின்கீழ், மக்கள் பயன்பாட்டிற்கு சேவை செய்து வருகிறது.

### பொதுப்பணித்துறை என்று பெயர் சூட்டிய அண்ணா!

முதல் தலைமைப் பொறியாளர் .ஆர்தன் காட்டன் இத்துறை அனைத்து துறைகளுக்கும் தாய்த்துறை. இதற்கு முன்னர் மராமத்து துறை என்ற பெயரில் இருந்துள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் “பொதுப்பணித்துறை“ என்று பெயர் சூட்டினார்.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு பொதுப்பணித்துறைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமைச்சராக இருந்தார். சிற்றூர் முதல் பேரூர் வரை, நகரம் முதல் மாநகரம் வரை, மாவட்டம் முதல் மாநிலம் வரை, எல்லா இடங்களிலும் கட்டடங்களை கட்டுவது மற்றும் அரசின் கட்டடங்கள், நினைவகங்கள், மருத்துவமனை கட்டடங்கள், கல்லூரி கட்டடங்கள் போன்றவற்றை பொதுப்பணித்துறையின் மூலமாகத்தான் கட்டப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார்.



நீதிமன்றத்தில் வழக்கு தோல்வியடைந்துவிட்டால், வழக்கறிஞர்கள் மீது குறை கள் சொல்வதில்லை. நோயாளி இறந்து விட்டால், மருத்துவர்கள் மீது குறைகள் சொல்வதில்லை. மாணவர்கள் தேர்வில் தோல்வியடைந்தால், ஆசிரியர்கள் மீது குறை சொல்வதில்லை. ஆனால், கட்டடங்கள் கட்டினால், பொறியாளர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும்.

ஒவ்வொரு பொறியாளரும், வாழ்க்கையில் இலக்கு அமைத்துக் கொண்டால் தான், முன்னேற முடியும் என்று குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள், பொதுப்பணித்துறையின் நிர்வாக அமைப்பினை தெளிவாக விளக்கி கூறினார்.

பொறியாளர்கள், வரைதொழில் அலுவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. 8.5.2023 முதல் இதுநாள் வரை நடத்தப்பட்ட 28 பயிற்சி வகுப்புகள் மூலம் சுமார் 1000க்கும் மேற்பட்ட பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 70க்கும் மேற்பட்ட சிறப்பு விரிவுரையாளர்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

பொதுப்பணித்துறை அமைப்பு மற்றும் செயல்பாடுகள், கட்டுமானப் பொறியியல் திறனை மேம்படுத்துதல், பொதுப்பணித்துறையின் தரக்கட்டுப்பாடு பிரிவின் செயல்பாடுகள், ஒப்பந்தப் புள்ளி நடைமுறைகள், கட்டட அடிக்கல் அமைப்பது தொடர்பான பயிற்சிகள், கட்டட வடிவமைப்பு பயிற்சி, கட்டுமானப் பணித் தொடர்பான நேரடி களஆய்வு, பணித்தள வரைபடம், மதிப்பீடு, நிர்வாக ஒப்புதல், MBook பயன்பாடு குறித்து பயிற்சி, பாரம்பரிய கட்டட புனரமைப்பு குறித்த பயிற்சி, PT Beam மற்றும் PT Slab குறித்த பயிற்சி, கட்டுமான பொருட்கள் பயன்பாடு மற்றும் தரஆய்வு ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள். அனைத்து உதவிப் பொறியாளர்களும், பயிற்சியின் அடிப்படையில் திறமையாக பணி புரிய வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்கள்.

### திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்!

ஒரு பணித்தளத்தில், பாதுகாப்பு மீறல், தொழிலாளர்கள் ஹெல்மெட் இல்லாமல் வேலை செய்தல் போன்ற குறைபாடுகளை சுட்டிக்காட்டி “S T A R” அணுகு முறையின் மூலம் தீர்க்கப்பட வேண்டு ம் என்று குறிப்பி ட்டார்கள். பொறியாளர்கள் மேன்மேலும் படித்து, அவர்களுடைய திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

பல துறைகளின் கட்டுமானப் பணிகள், பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பயன்பாட்டுத்துறையின் தேவையின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். பயன்பாட்டுத் துறையுடன் இணக்கமாக செயல்பட வேண்டும்.

### ஆய்வில் கவனம் செலுத்த வேண்டும்!

உதவிப் பொறியாளர்கள், முதற்கட்டப் பணிகளாக, மண் பரிசோதனை, குடிநீர் பரிசோதனை, அஸ்திவாரம் பணிகளின்போது பூச்சி தடுப்பு முறை (Pest Control), கட்டுமானப் பொருட்கள் பரிசோதனை, உப்பு நீரை தவிர்த்தல், சாம்பல் நிறத்துடன் சிமெண்ட் உள்ளதா என்பதை பரிசோதித்தல், மணல் தூசி துரும்பு இல்லாமல் இருப்பதை உறுதி செய்தல், கான்கிரீட்டுக்கு பயன்படுத்தப்படும் இரும்பு கம்பிகள் துரு இல்லாமல் இருப்பதை உறுதி செய்தல், செங்கல் தரமானதாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்தல் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுதல் அனைத்து பணிகளும் வரைபடங்கள் மற்றும் தொழில்நுட்ப விவரம் அடிப்படையில் பணி நடைபெறுவதை உறுதி செய்தல். பணிகளில் ஒப்பந்ததாரர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல், தொழிலாளர்களை கண்காணித்தல், பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்தல், கட்டுமானத்தின்போது ஏற்படும் தொழில்நுட்ப சிக்கல்களை தீர்க்க உறுதிசெய்தல் போன்றவற்றை உதவிப் பொறியாளர்கள் பொறுப்புடன் செயல்படுத்துவது அவசியம் என்று அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வின்போது, பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மணிவண்ணன், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் மணிகண்டன் மற்றும் பொதுப்பணித் துறை சார்ந்த அலுவலர்களும், பொறியாளர்களும் உடனிருந்தனர்.

## தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி

# மாவட்டப் பிரதிநிதி அ.வெங்கடேசன் மறைவு!

## மா.சுப்பிரமணியன் - கோவி.செழியன் - மயிலை த.வேலு - ஜெ.கருணாநிதி அஞ்சலி

சென்னை, செப். 26-

தியாகராய நகர் கிழக்கு பகுதி 135 ஆ வட்ட கழக செயலாளர் மு.செல்வகுமார் மாமாவும் 135 ஆ வட்ட இளைஞர் அணியைச் சார்ந்த வே. வசந்த், வே.விஸ்வா. வே. வர்ஷா ஆகியோரின் தந்தையுமான மகளிர் அணி சேர்ந்த மேகலா தேவியின் கணவருமான மாவட்ட பிரதிநிதி அ.வெங்கடேசன் 24-09-2025 பிற்பகல் 2 மணி அளவில் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்தவுடன் அமைச்சர்கள் மா.சுப்ரம ணியன், கோ.வி. செழியன், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் செயலாளர்கள் கே. ஏழுமலை, மயிலை எஸ். முரளி, நந்தனம் மதி, மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி, நந்தனம் வேதா, எஸ்.மோகன், கே.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு. மணி ஆகியோர் அஞ்சலி செலுத்திர்.

பொதுக்குழு உறுப்பினர்கள் எம் ஆறுமுகம், ஜி டி அம்பேத்கர், ஜெ ஜானகிராமன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன், சுற்றுசூழலின் மாவட்ட அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் ச சண்முகநாதன், எழும்பூர் பகுதி செயலாளர் சுதாகர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ் உமா சங்கர், ஏ அஸ்வின் குமார் மற்றும் வட்ட கழக செயலாளர் டி கமல், எம் எஸ் பழனி, தக்ஷன், ஹரிகரன், செந்தில், சக்திவேல், மணிவண்ணன், ஜி பி செந்தில், எம் கே மூர்த்தி, நாமோ முரளி, கே எஸ் வெல்டிங் ராஜா, பி மாரி.

பி ஜெயக்குமார் , என் துரை, எஸ் லட்சுமிகாந்தன், ராஜ் செழியன், எம்ஜிஆர் நகர் சசிகுமார், பாபா சுரேஷ், வி பி எஸ் ஜெனார், எஸ் பாரதி ராஜா, கார்த்திக் ராஜா, கார்த்திக் சந்திர கேசன், சவுண்ட் சர்வீஸ் குணா, இரா செந்தில், சு கண்ணதாசன், ஆர் லோகு, பழக்கடை ஈரா மூர்த்தி, சாலி மோகன், சக்திவேல், ஜே சீனிவாசன், ஸ்ரீதர் மற்றும் 135 ஆ மாவட்ட கழகத்தைச் சார்ந்த கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் பகுதி வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், , கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அண்ணாவின் இறுதி ஊர்வலம் நேற்று 25-09-2025 வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஏவிஎம் இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது.



மதுரவாயல் தெற்குப் பகுதி, 148 வது வார்டில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் முகாமினை சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டின் உரிமைக் குரலை

# உயர்த்திப் பிடித்த தமிழக முதல்வர்!



“ஓரணியில் தமிழ்நாடு என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் முழக்கம் என்பது, உரிய காலத்தில் விதைக்கப்பட்ட உரிமைக்கான முழக்கம் மட்டுமல்ல. மாறாக, உரிமைகள் மறுக்கப்படுமேயானால், உரிமைகளைப் பெறுவதற்கு களம் காண தமிழ்நாடு தயாராகும் என்கின்ற எச்சரிக்கை முழக்கமாகவும் இந்த எழுச்சி முழக்கம் பிரகடனப்படுத்துகிறது. கடந்த காலத்தில், நாட்டின் விடுதலைக்குப் பின்னர் அமைந்த ஒன்றிய ஆட்சிகளில் பா.ஜ.க தவிர்த்துமற்றையகட்சிகளின்ஆட்சிகள்மதச்சார்பற்றகோட்பாடுகளை அடித்தளமாக கொண்ட, ஜனநாயக குடியரசு ஆட்சி முறையைப் பின்பற்றி, நிர்வாக இயந்திரத்தை இயக்கும் ஆட்சிகளாகத்தான் செயல்பட்டு வந்தன.

ஆனால், 2014 ஆம் ஆண்டு தொடங்கி ஒன்றியத்தில் மோடி தலைமையில் நடைபெற்று வரும் ஆட்சி, இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைகளை தகர்த்துவிட்டு, மதவாத அடிப்படையிலான ஓர் ஆட்சியை மத்தியில் நிறுவிடவும், நடைபெறுகின்ற கூட்டாட்சி முறைக்கு முடிவு கட்டிடவும் தொடர்ந்து தீவிர முயற்சியினைத் திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறது. பா.ஜ.காவால் உருவாக்கவிருக்கும் ஒன்றிணைந்த ஆட்சிக்கு, ”இந்துராஷ்ட்ரம் எனப் பெயர் சூட்டி, கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் முடிய நீண்டு பரந்த இந்த நிலப்பரப்பிற்கு ”இந்துராஷ்ட்ரம் என்றும், இங்கு வாழக்கூடிய மக்களில் இந்துக்களே முன்னுரிமை பெற்றவர்கள், மற்றைய மதம் சார்ந்த மக்கள் இரண்டாம்தர குடிமக்களாக கருதப்படக்கூடிய அரசியல் சமூகச் சூழ்நிலைகளை, ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து திட்டமிட்டு படிப்படியாக, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு, இந்திய அரசியல் சட்டத்தின் (INDIAN CONSTITUTION) எந்தெந்த பிரிவுகள் தடைகளாக இருக்கும் என்று பா.ஜ.க அரசு கருதுகிறதோ, அந்த பிரிவுகளை எல்லாம் படிப்படியாக மாற்றி அமைக்கின்ற முயற்சிகளையும், தொடர்ந்து பா.ஜ.க ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் நிகழ்வுகளை, கடந்த பத்தாண்டு காலமாக இந்திய குடிமக்கள் அனைவரும்கவலையுடன்கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சியின் அரசியல் சித்தாந்த வழிகாட்டும் அமைப்பான ராஷ்டிரிய சுயம்சேவக்சங் (RSS) ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் உள்ள பாரதிய ஜனதா கட்சிக்கு இந்தத் திட்டமிட்ட முயற்சியில் வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தை பாபா சாகிப், டாக்டர். அம்பேத்கர் அவர்களின் தலைமையில், உருவாக்கிய நம் தேசிய தலைவர்கள் இந்தியாவின் ஒற்றுமை சிதறுண்டுப்போகாமல்தொடர்ந்துபாதுகாக்கப்படவேண்டுமேயானால், ”வேற்றுமையில் ஒற்றுமை என்ற சித்தாந்த அடிப்படையில் இந்திய அரசியலமைப்பு கட்டமைக்கப்பட வேண்டும் என்று கருதிய காரணத்தினால்தான், இந்திய ஒற்றுமையை நிரந்தரமாக பாதுகாக்கும் தொலைநோக்கு திட்டத்தின் வெளிப்பாடாக ”மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுய ஆட்சி என்ற அடிப்படையில் அரசு அதிகாரங்கள் ஒன்றிய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் பிரித்தளிக்கப்பட்டன.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு
உறுப்பினர்



இப்படி, அதிகாரங்கள் பிரித்தளிக்கப்பட்ட சூழ்நிலையில், மாநிலங்கள் தன்னாட்சியோடு செயல்பட வேண்டுமெனில், ஒன்றி யத்திற்கு அபரிதமாக ஒதுக்கப்பட்ட அதிகாரக் குவியல்களைப் பிரித்து, மாநிலங் களுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்கிட வேண்டு மென்ற குரல் இப்பொழுதும் தொடர்ந்து இந்திய அரசியல் அரங்கத்தில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்தின் தலையாய அரசியல் கோட்பாடுகளில் ஒன்று தான் ”மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதாகும். இத்தகைய அரசியல் சூழ்நிலையில், பிரதமர், நரேந்திர மோடி ஆட்சி அமைத்த நாள் தொடங்கி, பாரதிய ஜனதா கட்சியின் ராஜகுருவான ராஷ்டிரிய சுயம் சேவக்சங் (RSS) என்ற மதவாத அமைப்பின் செயல் திட்டங்களைத் திட்டமிட்டு படிப்படியாக, நிறைவேற்றிக் கொண்டே வருகிறது. பாரதிய ஜனதா கட்சியின் இந்த திரைமறைவு நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகள் ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் ஆளுநர்கள் மூலமாக, தங்களது நோக்கங்களை நிறை வேற்றிக் கொள்ளும் திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இனியும், மாநில அரசுகள் அமைதி காட்டுமேயானால், ஒன்றிய பா.ஜ.க அரசு தங்களது திட்டங்களை நிறைவேற்றி இந்தியாவை ”இந்து ராஷ்ட்ரமாக மாற்றிடும் இலக்கை நோக்கிய தங்கள் பயணத்தை தொடர்வார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, இனியும் அமைதி காட்டிட இயலாது என்பதோடு நெருங்கி வரும் மதவாத கலாச்சாரப் பண்பாட்டுப் படையெடுப்பை தடுத்து நிறுத்திட உடனடியாக களம் அமைக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில்தான் தமிழ்நாட்டின் முதல்வர், திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அமைத்த களத்தின் எதிர் முழக்கம்தான் ”தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம், ”ஓரணியில் தமிழ்நாடு என்ற இலட்சிய முழக்கங்களாகும்.

இந்த முழக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் தமிழ்நாட்டின் முதல்வருக்குப் பின்னால், அனைவரும் மதம், இனம், ஜாதி என்கின்ற வேறுபாடுகளை தொலைவில் தூக்கி எறிந்துவிட்டு, தமிழ்நாட்டை நோக்கி வரும் திட்டமிட்ட கலாச்சாரப் படையெடுப்பை தடுக்கும் ஆம்! இனமான தமிழர் படை தான் 'ஓரணியில் தமிழ்நாடு' என்பதோடு இந்த மண்ணின் மானம் காக்க ஆர்ப்பரித்து எழுந்து வரும் தமிழர்படையின் முழக்கம்தான் "ஓரணியில் தமிழ்நாடு!

கடந்த செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் கரூரில் நடைபெற்ற முப்பெரு விழா நிகழ்வில் கழகத் தலைவர் முதல்வர் ஏன் ஓரணியில் தமிழக மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்பதற்கான விளக்கத்தை கொட்டும் மழையில் கம்பீரமாக அலைகடல் போல் ஆர்த்தெளிந்த கையொலிக்கு மத்தியில் நெஞ்சுயர்த்து தெரிவித்தார்கள். ஒன்றிய அரசால் தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக கொடுக்கப்படும் முதல் தாக்குதல் எதுவெனில், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை குறைத்திடும் திட்டமிட்ட முயற்சியாகும். இப்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டவிரோதமாகவும், நியாயவிரோதமாகவும் குறைக்க முயற்சிப்பதற்கு காரணம் நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டினுடைய உரிமைக் குரலை வலுவிலக்க செய்யும் முயற்சியாகும். எனவே, இந்த நயவஞ்சகத் திட்டத்தை எதிர்க்க வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழ்நாட்டிலேயுள்ள ஒவ்வொரு தமிழனது கடமை என்பதை எடுத்து விளக்கினார்கள்.

இரண்டாவதாக, வாக்காளர்ப் பட்டியலை ஆழ்ந்து மறுபரிசீலனைச் செய்யும் திட்டத்தின் மூலம் (SIR) தமிழ்நாட்டு வாக்காளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவான வாக்காளரின் எண்ணிக்கையை அதிகளவில் சேர்ப்பதற்குமான முயற்சியினை ஒன்றிய அரசு திட்டமிட்டு மேற்கொள்ளவிருக்கிறது.

மூன்றாவதாக, நீட் தேர்வின் மூலம் தமிழ்நாட்டில் இளைஞர்களின் முன்னேற்ற பாதையில் தடைகள் அமைத்து இளைஞர்களின் எதிர்கால பிரகாசமானவாழ்விற்குமுட்டுக்கட்டைப் போடுகின்ற ஒன்றிய அரசின் முயற்சியையும் தமிழ்நாட்டிற்கு கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை நிபந்தனையின்றி வழங்க வேண்டும் என்ற இளைஞர்களின் எதிர்கால வாழ்விற்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் ஓரணியில் ஒன்றுதிரள வேண்டும்.

நான்காவதாக, தமிழ்மொழி, பண்பாடு மற்றும் பன்முகப் பெருமைக்கும், புகழுக்கும் எதிரான நடவடிக்கை களை ஒன்றிய அரசு மேற்கொள்ளு மேயானால், அதனை எதிர்த்து களத்திலே நின்று போராடுவதற்கு தமிழர்கள் ஓரணியில் திரள வேண்டும்.

ஐந்தாவதாக, பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் என உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் ஒன்றிய அரசின் சட்டங்களாலோ, திட்டங்களாலோ ஊனப்படுத்துமேயானால் தமிழர்கள் ஓரணியில் ஒன்று திரண்டு போராட வேண்டும்.

இந்த ஐந்து அம்சங்களை ஆழ்ந்து சிந்தித்து அதற்கான எதிர்வினை ஆற்றாவிடில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசின் அடிமைகளாக, ஆம்! உரிமையற்றவர்களாக வாழவேண்டிய இருண்ட எதிர்காலத்தை சந்திக்க வேண்டிய நிர்பந்தம் நிச்சயம் உருவாகும் என மாண்புமிகு. தமிழக முதல்வர் முப்பெரும் விழா நிகழ்ச்சி யில் முழுமையாக எடுத்து விளக்கி னார்கள். இந்த ஐந்து சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளே தமிழ்நாட்டின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படைகளாகும்.

எனவேதான் இந்தப் பிரச்சினைகளை முன்னெடுத்து, ஒன்றிய அரசிற்கு எதிராகப் போராடுவதற்கு அனைத்து மக்களும் ஜாதி, மதம், இனம், மொழி, வேறுபாடு கருதாமல் ஒன்றிணைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். அனைத்து தமிழ்நாட்டு மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்ற வேண்டுகோள் தேர்தல் வெற்றிக்காக விடப்பட்டதல்ல. மாறாக, இந்த பிரச்சனைகளில் தமிழ்நாட்டு மக்கள் தங்களின் உரிமைகளை, நயவஞ்சகத்தோடு திட்டமிட்டுச் செயல்பட்டு கொண்டிருக்கும் ஒன்றிய அரசினுடைய நடவடிக்கைகளுக்கு எதிராக உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் ஒவ்வொரு தமிழனும் இருக்கின்றான் என்பதை நாம் அதனை உணர்ந்து "ஓரணியில் ஒன்றிணைவோம், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்! என்பதோடு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைநிமிர்ந்து நெஞ்சுயர்த்தி நேர்வழியில் களம் காண்போம் வாரீர்!



கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் 2025– 2026 கலைஞர் நகரபுற மேம்பாட்டுத்திட்டதின் கீழ் ரூபாய் கோடியே 29 லட்சம் திட்டமதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. பங்கேற்று அடிக்கல் நாட்டினார். சகிலாஅறிவழகன், நிகழ்ச்சியில் மு.கேசவன், மு.மணிபாலன், கே.என்.பாஸ்கர், இரா.அறிவழகன், மு.பாஸ்கர், எஸ்.ராமஜெயம், அப்துல்கரீம், எம்.குப்பன், அர்ஜீன், இஸ்மாயில், எஸ்.ஏ.வெங்கடேசன். ஏஸ்.கருணாகரன், ஜெயசந்திரன், சிவராமரெட்டி, காளிதாஸ், பொன்சாந்தி, ராஜசேகர், முனுசாமி, இளஞ்செல்வம், தசரதன், வி.குமார், எம்.குமார், கௌதம், பாலுமகேந்திரா, கெங்குமுதலியார், லோகநாதன், குணசேகரன், எஸ்.கோபி, மனோஜ், சீதாராமன், நந்தகுமார், பேரூராட்சி அதிகாரிகள் ஜெயகுமார், சரவணன், பாஸ்கரன், ரவி, அசாருதின் மற்றும் பலர் பங்கேற்றனர்.